**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**சாட்சிகளின் வாக்குமூலம்**

**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை முறை சட்டம்)**

**அமர்வு வழக்கு எண். : 188/2024**

**நாள்: 24.03.2026**

**அரசு தரப்பு சாட்சி** : 17 (LW18)

2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 24ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பாலமுருகன் | தொழில் | |
| தந்தை பெயர் | மோகன் | சமயம் | |
| கிராமம் | | வயது | |
| தாலுகா | | | |

(எதிரி ஆஜர்)

<u>முதன்மை விசாரணை:</u>

நான் தற்போது SP பட்டிணம் காவல் நிலையத்தில் தலைமைக்காலவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 19.11.2023ம் தேதி திருப்பாலைக்குடி காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்தபோது, திருப்பாலைக்குடி காவல் நிலைய குற்ற எண்.196/2023, பிரிவு 302 இதச வழக்கில் இறந்துபோன முனியசாமி, த/பெ.வாழவந்தான், வாகைவயல் என்பவரின் பிரேத விசாரணை முடித்து, பிரேத பரிசோதனைக்காக 14.15 மணிக்கு தபாலை பெற்று, இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் ஒப்படைத்தேன்.

பிரேத பரிசோதனை முடிக்க மருத்துவருக்கு உதவியாக இருந்து, மருத்துவரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட ஊதா அரக்குகலர் கட்டம் போட்ட



MEHBUB ALI KHAN A K

Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.24 18:00:20 +0530

கைலி ஒன்றும், NSK ஊதா கலர் ஜட்டி ஒன்றும், இரத்த மாதிரி ஆகியவற்றை பெற்று, பிரேத பரிசோதனை முடித்து, பிரேதத்தை அவரின் உறவினர்களிடம் ஒப்படைத்தேன். பின்பு பிரேதத்தில் இருந்து கைப்பற்றப்பட்ட சொத்தினை காவல் ஆய்வாளர் அத்தாட்சி மூலம் என்னிடம் இருந்து கைப்பற்றினார். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

அந்த ஊதா அரக்குகலர் கட்டம் போட்ட கைலி அ.சா.பொ.3 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. NSK ஊதா கலர் ஜட்டி அ.சா.பொ.4 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. இரத்த மாதிரி அ.சா.பொ.5 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.

மறு விசாரணை – இல்லை.

MEHBUB ALI KHAN A K

Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.24 18:00:24 +0530

முதன்மை அமர்வு நீதிபதி ,
இராமநாதபுரம் .